தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 10, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2027

1996 ஜூலை 25, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி"

உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவது போல ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. வி. தவமணித் தேவர் அவர்கள் 24-6-1996 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. தவமணித் தேவர் அவர்கள் மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை மற்றும் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

53/318—1a

[பேரவைத் தலைவர்]

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

வினாக்கள் - விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா எண்16, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

16—

ஊர்களின் பெயர்களை மாற்றுதல்

*** 702. திரு. மு. க. ஸ்டாலின்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

ஜாதிப் பெயர்களில் உள்ள பல ஊர்களின் பெயர்களை மாற்றும் திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. மு. க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் பெருமாள் முதலித் தெரு, நைனியப்ப நாயக்கர் தெரு, மாதவ நாயர் தெரு, சிங்கண்ணச் செட்டித் தெரு, கிருஷ்ணமாச்சாரியார் தெரு போன்ற பல்வேறு தெருக்களின் பெயர்களிலுள்ள நாயக்கர், நாயர், செட்டி, ஆச்சாரியார் போன்ற ஜாதியைக் குறிக்கும் வார்த்தைகள் நீக்கப்பட்டதைப் போல ஊர்களின் பெயர்களில் ஜாதிகளைக் குறிப்பிடக்கூடிய சொற்களை நீக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இதுபற்றி ஆராயும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS